ரன் சலு | RAN SALU

පේෂ කර්මාන්ත දෙපාර්තමේන්තුව

புடவைக் கைத்தொழில் திணைக்களம்

DEPARTMENT OF TEXTILE INDUSTRY

# 2015

# වාර්ෂික කාර්යසාධන වාර්තාව

# வருடாந்த செயற்பாட்டு அறிக்கை

# ANNUAL PERFORMANCE REPORT

කර්මාන්ත හා වාණිජ කටයුතු අමාත්‍යාංශය

கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சு

MINISTRY OF INDUSTRY AND COMMERCE

# புடவைக் கைத்தொழில் திணைக்களம்

## 01 அறிமுகம்

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் சட்டத்திற்கு செய்யப்பட்ட 13ம் திருத்தத்திற்கு அமைய கைத்தறி நெசவுத் தொழில் தொடர்பான விடயம் மாகாண சபையின் கீழ் உள்ள விடயமாகும். அதன் பிரகாரம் நெசவுக் கைத்தொழில் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருப்பது அவ் விடயத்திற்குரிய கொள்கை ரீதியான தீர்மானங்களும் மையப்படுத்தப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் மாகாண சபை நெசவுக்கைத்தொழில் பிரிவுடன் இணைந்து செயலாற்றுவதனூடாக தொழிலின் முன்னேற்றதிற்குரிய சேவைகளை வழங்குதல்.

### 1.1 நோக்கம்

உள்நாட்டு தனித்துவம் மற்றும் கலாசாரத்திற்கு ஏற்றவகையில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தை செயற்பாடுகளினை வெற்றிபெறக்கூடிய வகையில் கைத்தறி நெசவுக்கைத்தொழில் துறையில் ஆக்கபூர்வமான போட்டியடிப்படையில் முதல்தர துணி உற்பத்திக்காக உற்பத்தியாளர்களை ஈடுபடுத்துதல்.

### 2.1 குறிக்கோள்

அரச கொள்கை எல்லைக்குட்பட்ட கைத்தறி நெசவுத்தொழிலின் அபிவிருத்திக்காக குறித்த கொள்கையினை தயாரித்தல். அக்கொள்கையினை செயற்படுத்துவதற்குத் தேவையான வழிகாட்டல்கள் தேவையான சேவை மற்றும் வசதிகளை வழங்கலும் நடைமுறைப்படுத்தலும் மற்றும் இணைந்து செயலாற்றுவதனூடாக கைத்தறிநெசவுத்தொழில் துறையில் அளவிலும் தரத்திலும் வளர்ச்சியை ஏற்படுத்துதல்.

## 1.3 இலக்கு

- கைத்தறி நெசவுக்கைத்தொழில் அபிவிருத்திக்கு பொருத்தமான கொள்கையினை தயார் செய்தல்.
- உற்பத்தி அபிவிருத்தியை நோக்காகக்கொண்ட வேலைத்திட்டத்தினை வழங்குதல்.

  சிறுமுயற்சியாளர் அபிவிருத்தி செயற்றிட்டம்

  அலங்கார வேலைப்பாட்டு நிகழ்ச்சித்திட்டம்

  பயிற்சிவிப்பாளர்களுக்கு பயிற்சியளிக்கும் வேலைத்திட்டம்

- கைத்தறி நெசவுக்கைத்தொழில் துறையின் அபிவிருத்திக்குத் தேவையான ஆலோசகர்கள் மற்றும் ஊழியர்களை பயிற்றுவித்தல்.
- துறைக்குத் தேவையான உழைப்பாளர்களை பயிற்றுவித்தல்.
- விநியோக வளர்ச்சி (உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு விநியோக நடவடிக்கைகளை ஒருங்கமைத்தல்)

  கைத்தறி நெசவுத்தொழிலை விரிவுபடுத்துதலை நோக்காகக் கொண்ட பொருத்தமான வேலைத்திட்டம், சுயதொழில் மற்றும் மேலதிக சேவை வழங்கல் வேலைத்திட்டங்களை ஒருங்கமைத்தல்.

- கைத்தறி நெசவுக்கைத்தொழிலில் அலங்கார அபிவிருத்தி மற்றும் பண்புசார் விருத்தியை நோக்காகக் கொண்ட கண்காட்சி மற்றும் போட்டிகள் நடாத்தப்படுதல்.
- தேசிய கைத்தறி நெசவுக்கைத்தொழில் கண்காட்சி நடாத்துதல்.
- கைத்தறி நெசவுத்கைத்தொழில் விருத்திக்குத் தேவையான ஆராய்ச்சி பரிசோதனை செய்தல் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள்.
- புதிய தொழில்நுட்பத்தினை அறிமுகப்படுத்துதல் மற்றும் குறித்த அபிவிருத்தி நடவடிக்கைகள்.

குறித்த இலக்கை அடைவதற்காக கீழ் குறிப்பிடப்படும் நிறவனம் இத் திணைக்களத்தின் கீழ் தற்போது செயற்படுகின்றது.

**i)** **ஆராய்ச்சி பயிற்சி வடிவமைப்பு மற்றும் பயிற்சி நிலையம், கட்டுபெத்த ( நெசவுக்கைத்தொழில் நூதனசாலை, ஆய்வுகூடம் உட்பட)**

280/1 காலி வீதி கட்டுபெத்த மொரட்டுவ







**ii)** **இயற்கை நிறங்கள் செயற்திட்டம், ராஜகிரிய**

### iii) நெசவுக்கைத்தொழில் பயிற்சி பாடசாலைகள்

புடவை கைத்தொழில் திணைக்களத்தின் கீழ் 12 பயிற்சி பாடசாலைகளும் 02 அலங்கார பயிற்சி பாடசாலைகளும் காணப்படும்

| இல | நிறுவனம் | முகவரி |
|---|---|---|
| 01 | பெகெகம் சிப் பியஸ கட்டுபெத்த | 280/1, காலி வீதி, கட்டுபெத்த, மொரட்டுவ |
| 02 | பெகெகம் சிப் பியஸ கொட்டல | கொட்டல, வேயன்கொட |
| 03 | பெகெகம் சிப் பியஸ போயகனை | போயகனை, குருணாகல் |
| 04 | பெகெகம் சிப் பியஸ பின்னவல | பின்னவல, றம்புக்கன |
| 05 | பெகெகம் சிப் பியஸ வட்டபுழுவ | அருப்பல வீதி, வட்டபுழுவ, கண்டி |
| 06 | பெகெகம் சிப் பியஸ கட்டமபே | கட்டம்பே, பேராதனை |
| 07 | பெகெகம் சிப் பியஸ மாத்தளை | கோன்ககமுல, பலாபத்வல, மாத்தளை |
| 08 | பெகெகம் சிப் பியஸ மாத்தறை | ஹக்மன வீதி, மாத்தறை |
| 09 | பெகெகம் சிப் பியஸ கிரம | கிரம |
| 10 | பெகெகம் சிப் பியஸ பண்டாரவெலை | கீணிகம, பண்டாரவெலை |
| 11 | பெகெகம் சிப் பியஸ நல்லூர் | 194, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் |
| 12 | பெகெகம் சிப் பியஸ சம்மாந்துறை | சம்மாந்துறை |
| 13 | வடிவமைப்பு பயிற்சி பாடசாலை கட்டுபெத்த | 280/1, காலி வீதி, கட்டுபெத்த, மொரட்டுவ |
| 14 | வடிவமைப்பு பயிற்சி பாடசாலை கட்டம்பே | கெட்டம்பே, பேராதனை |










2015/12/31ம் திகதிக்கு திணைக்களத்தின் ஊழியர் சபை

| பதவி | அனுமதிக்கப்பட்ட ஊழியர் சபை | தற்போதைய ஊழியர் சபை | பற்றாக்குறை |
|---|---|---|---|
| **உயர் அதிகாரிகள** | | | |
| நெசவுக்கைத்தொழில் பணிப்பாளர் | 01 | 01 | - |
| உதவிப் பணிப்பாளர் (நிர்வாகம்) | 01 | 01 | - |
| உதவிப் பணிப்பாளர் (அபிவிருத்தி) | 01 | - | 01 |
| கணக்காளர் | 01 | 01 | - |
| நெசவுக் கைத்தொழில்நுட்ப விஞ்ஞானி | 01 | 01 | - |
| **ஊழியர்கள்** | | | |
| தொழில் அதிகாரி | 01 | - | 01 |
| தொழிநுட்பவியலாலர | 01 | 01 | - |
| அபிவிருத்தி உதவியாளர் | 08 | 08 | - |
| அரச முகாமைத்துவ உதவி சேவை | 20 | 15 | 05 |
| நெசவு ஆலோசகர் | 61 | 56 | 05 |
| நிறைவுறு உதவியாளர் | 01 | 01 | - |
| சித்திர செய்முறையாளர் | 18 | 12 | - |
| **சிற்றூழியர்கள்** | | | |
| சாரதி | 05 | 03 | 02 |
| அலுவலக உதவி சேவையாளர | 10 | 04 | 06 |
| காவற்காரர(பற்றாகடகுறையினை பூர்த்தி செய்ய நேர்முகப்பரீட்சையினை நடாததியுள்ளது) | 18 | 05 | 13 |
| உதவிபெறும் காவற்காரர் | 05 | - | - |
| தற்காலிக காவற்காரர் | 01 | - | - |
| தொழிலாளர் | 09 | 08 | 01 |
| **மொத்தம்** | 163 | 117 | |

**புதிதாக இணைத்துக்கொள்ளல் மற்றும் ஓய்வு பெறல்**

2015ம் ஆண்டில் இரு முகாமைத்துவ உதவியாலளர்கள் புதிதாக பதவியேற்றதுடன் முகாமைத்துவ உதவியாளர் ஒருவர் வேவையில் இருந்து நீங்கினார்.

2015 ஆம் வருடத்தில் கீழ் குறிப்பிடப்படும் வகையில் அதிகாரிகள் ஓய்வு பெற்றுள்ளார்கள்.

முகாமைத்துவ உதவியாளர் ~ 01

நெசவு ஆலோசகர் ~ 04

சித்திர செய்முறையாளர் ~ 01

## 02. 2015 வருடத்தின் நிதி சம்பந்தமான வளர்ச்சி

### 2.1 ஒதுக்கீட்டின் உபயோகம்

2015 வருடத்தில் திட்டமிடப்பட்டிருந்த நிதி ஒதுக்கீடு கீழ் குறிப்பிடப்படும் வகையில் சதவீதங்களில் பயன்படுத்தப்பட்டிருந்தது.

முழு தேறிய மீண்டெழும் ஒதுக்கீட்டின் சதவீதமாக முழுப் பாவனை 95%

முழு தேறிய மூலதன ஒதுக்கீட்டின் நூற்றுவீதத்தின் முழுப்பாவனை 58%

| செலவு விடயம் | | முழு தேறிய ஒதுக்கீடு (2015 வருடம்) (ரூபா) | மொத்தச் செலவு (ரூபா) | தேறிய விளைவு மிகுதி/அதிகரிப்பு (ரூபா) | செலவு சதவீதம் |
|---|---|---|---|---|---|
| | மீண்டெழும் செலவுகள் | | | | |
| 1001 | தனிநபர் சம்பளங்கள் | 25,600,000 | 24,966,465 | 633,535 | 98% |
| 1002 | மேலதிக நேர மற்றும் விடுமுறை தின சம்பளம் | 800,000 | 571,624 | 228,376 | 71% |
| 1003 | ஏனைய கொடுப்பனவு | 30,925,000 | 30,742,766 | 182,234 | 99% |
| | ஏனைய மீண்டெழும் செலவுகள் | 14,675,000 | 11,967,887 | 2,707,113 | 82% |
| | | | | | |
| | மூலதன செலவுகள் | | | | |
| 2001 | கட்டிடமும் நிர்மாணமும் | 2,000,000 | 70,930 | 1,929,070 | 4% |
| 2003 | வாகனம் | 875,000 | 872,163 | 2,837 | 100% |
| 2102 | தளபாடம் மற்றும் அலுவலக உபகரணம் | 900,000 | 892,756 | 7,244 | 99% |
| 2401 | பயிற்சியளித்தலும் திறன் விருத்தியும் | 27,725,000 | 16,446,010 | 11,278,990 | 59% |

## 2.2 வருமானக் கணக்கு

நெசவுத் கைத்தொழில் திணைக்களம் சேவை வழங்கும் நிறுவனமொன்று என்பதனால் விசேட வருமானம் இல்லை.

## 2.3 அரச அதிகாரிகளின் முற்பண பீ கணக்கின் செயற்பாடு

| | உச்ச வரவு எல்லை ரூபா | குறைந்த கிடைக்கும் எல்லை ரூபா | உச்ச வரவு மீதி எல்லை ரூபா |
|---|---|---|---|
| வருடாந்த பகிர்வுக் கணக்கின் எல்லை | 5,000,000 | 3,000,000 | 25,000,000 |
| அமைச்சரவையின் திருத்த எல்லை(303011) | 5,650,000 | 3,650,000 | 25,000,000 |
| வருடாந்த உண்மைச் செலவுகள்(303011) | 3,759,047 | 5,860,741 | 11,795,612.91 |

## 3. வருடாந்த செயற்பாடுகள்

- 3.1 அநுராதபுரம் தளாவை நெசவுபயிற்சி நிறுவன கட்டிடத்தினை புதுப்பித்தல் (நெசவு பாடசாலை அல்லது வடிவமைப்பு பாடசாலை ஒன்றினை ஆரம்பித்தல்)

- புடவை கைத்தொழில் திணைக்களத்தின் கடடுபெத்த பிரிவின் பின்வரும் பகுதிகளை புதுப்பிக்கப்பட்டுள்ளது.

  பணிப்பாளர் விடுதி

  மாணவர் விடுதி

  கூரையினை புணர்நிர்மாணம் செய்தல் ~ பண்டகசாலை இல 01

  கூரையினை புணர்நிர்மாணம் செய்தல் ~ பண்டகசாலை இல 02

  கூரையினை புணர்நிர்மாணம் செய்தல் ~ பண்டகசாலை இல 02 (உப பிரிவு)

- மாளிகாவத்தை கொழும்பு 10 இல் உள்ள புடவை கைத்தொழில் திணைக்களத்தின் புதுகட்டிடத்தின் 2ஆம் பிரிவு புதுப்பித்தல் நடவடிக்கை

### 3.2 வலுவூட்டும் பிரிவு தொடர்பான நடவடிக்கைகள்

திணைக்களத்திலிருந்து தனியார் நிறுவனத்திற்கு விற்பனை செய்யப்பட்டுள்ள வலுவூட்டும் நிறுவனம் தொடர்பான நடவடிக்கை மற்றும் அந் நிறுவனங்களில் இருந்து தொழில் இழந்த ஓய்வூதியம் மற்றும் இழப்பீட்டிற்கு விண்ணப்பிக்கும் அதிகாரிகள் தொடர்பான நடவடிக்கைகள் இப் பிரிவினூடாக செயற்படுத்தப்படும்.

1980/81/82 ஆண்டுகளில் தனியார் மயப்படுத்தப்பட்ட நெசவுக் கைத்தொழில் திணைக்களத்திற்குரிய வலுவூட்டும் வியாபார நிறுவனங்களில் சேவை செய்த 10 வருடத்திற்கு குறைந்த ஊழியர்களிற்கான இழப்பீட்டுத் தொகையொன்று வழங்குவதற்காக இல 12/0865515/004-1 மற்றும் 2012-07-12ம் திகதிய அமைச்சுத் தீர்மானத்திற்கேற்ப குறித்த இழப்பீட்டினை வழங்கியுள்ளது.

இழப்பீட்டினை வழங்கும் போது மரணமடைந்திருந்த 57 சேவையாட்களின் தங்கி வாழ்பவர்கள் 176 பேருக்கு 1411476/515/023 இலக்க மற்றும் 2014.11.20 ஆம் தின அமைச்சரவை அனுமதிக்கேற்ப இழப்பீட்டினை வழங்கியுள்ளது.

### 3.3 நெசவுக் கைத்தொழில் பயிற்சி செயற்திட்டம்

- நெசவுக்கைத்தொழில் பயிற்சி பாடசாலைகளுக்கு மாணவர்களை இணைத்து பயிற்சியளித்தல்

நெசவுக்கைத்தொழில் திணைக்களத்தின் கீழ் செயற்படுகின்ற நெசவுக்கைத்தொழில் பயிற்சி பாடசாலை 12 ஊடாக நெசவுத்தொழில் தொடர்பான ஆறு மாதகால அடிப்படைப் பயிற்சிப் பாடநெறி மற்றும் 13 மாதகால இறுதிச் சான்றிதழ் பாடநெறியினூடாக குறித்த பயிற்சியைப் பெற்றுக்கொடுத்தல்.

அதன் பிரகாரம் 2014/2015 கல்வியாண்டில் 2014.07.01 முதல்2015.07.31 வரை பாடநெறியினை தொடர்வதற்கு 180 மாணவர்கள் சேரத்துக்கொள்ளப்பட்டதோடு 2015/2016வருடத்திற்காக (2015.07.02 முதல் 2016.07.31 வரை) 2015 ஜூலை மாதம் இணைத்துக் கொண்ட மாணவர்களின் எண்ணிக்கை 161 ஆகும்.

| நெசவு பயிற்சி பாடசாலை (பெகெகம் சிப்பியஸ) | கல்வி ஆண்டு மற்றும் இணைத்துக்கொள்ளப்பட்ட மாணவர்கள் | |
|---|---|---|
| | **2014/2015** (2014.07.01 - 2015.07.31) | **2015/2016** (2015.07.02 - 2015.07.31) |
| **பேரயகனே** | 23 | 28 |
| **கெடம்பே** | 17 | 18 |
| **வட்டபுழுவ** | 10 | 16 |
| **பின்னவலை** | 10 | 12 |
| **கட்டுபெத்த** | 09 | 14 |
| **கொட்டல** | 05 | 16 |
| **மாத்தளை** | 05 | 07 |
| **மாத்தறை** | 15 | 12 |
| **கிரம** | 13 | 15 |
| **பண்டாரவெலை** | 17 | 15 |
| **சம்மாந்துறை** | 34 | 04 |
| **நல்லூர்** | 22 | 04 |
| **மொத்தம்** | **180** | **161** |



* நெசவுக்கைத்தொழில் வடிவமைப்பு பாடசாலைகளுக்கு மாணவர்கள் இணைத்து பயிற்சி வழங்கல்

நெசவுக்கைத்தொழில் திணைக்களத்தின் கீழ் செயற்படுத்தப்படுகின்ற அலங்கார பயிற்சி பாடசாலைகள் இரண்டாகும். 2015 கல்வியாண்டிற்காக 2015 ஜனவரி மாதம் கட்டம்பே அலங்கார பயிற்சி பாடசாலைக்கு 10 மாணவர்களும் கட்டுபெத்த அலங்கார பயிற்சி பாடசாலைக்கு 12 மாணவர்களும் இணைத்துக்கொள்ளப்பட்டது. திணைக்களத்தின் நெசவு கைத்தொழில் இறுதி சான்றிதல் பரீட்சையில் சித்தி பெற்றவர்களினை அலங்கார பயிற்சி பாடசாலைக்கு சேர்த்துக்கொள்ளப்படும்.

**4 கைத்தறி நெசவுத் தொழில் விற்பனை மேம்படுத்தல் வேலைத்திட்டம்**

* கைத்தறி நெசவுதொழில் விற்பனைக் கூடம்

உள்நாட்டு கைத்தறி நெசவுத்தொழில் உற்பத்தியாளர்களிற்காக விற்பனை சந்தர்பங்களை பெற்றுக்கொடுத்து மக்களிடையே கைத்தறி பிடவையினைப் பிரபலப்படுத்துதலும் அதற்காக அதிக கேள்வியினை ஏற்படுத்துதலும் நோக்காகக் கொண்டு 2015 ஏப்ரல் மாதம் 08~10 ஆம் திகதிகளில் கொழும்பு 07 இல் அமையப் பெற்றுள்ள சிங்கள கலாசார நிலையத்தில் (சுதர்ஷி மண்டபத்தில்) நடாத்தப்பட்டது.

* கைத்தறி புடவை போட்டி கண்காட்சி விற்பனை கூடம் மற்றும் விருதுகள் வழங்கும் வைபவம்

கைத்தறி நெசவுத்தொழில் தரத்தினைக் கூட்டுதல் மற்றும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு விற்பனையினை நோக்காகக் கொண்டு உள்நாட்டு உற்பத்திசெய்கின்ற கைத்தறி நெசவுத்தொழில் துறையில் ஈடுபடுகின்றவர்களின் திறமையினை வளர்ப்பதற்கு , ஊக்குவித்தல் மற்றும் அவர்களின் திறமையினை பாராட்டுதலிற்காக வருடாந்தம் நடாத்தப்படுகின்ற தேசிய கைத்தறி புடவைக் கண்காட்சி மற்றும் சான்றிதழ் வழங்கல் 2015 டிசெம்பர் மாதம் 18 – 20 திகதிகளில் பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டப வளாகத்தில் நடாத்தப்பட்டது.














DEPT. OF NDUSTRIIES - NORTHERN PROVINCE



## 5 சேவை பயிற்சி செயற்திட்டம்

நெசவுக் கைத்தொழில் முகாமையாளர்கள், சிறுமுயற்சியாளர்கள் மற்றும் ஆலோசகர்கள் வரை சென்றடையும் வகையில் நெசவுத்தொழிலின் வளர்ச்சிக்குத் தேவையான பயிற்சி வேலைத்திட்டம் மற்றும் கருத்தரங்கு ஆயத்தப்படுத்துதல் மற்றும் செயற்படுத்துதல் மற்றும் தயார்படுத்துதல் இதன் கீழ் நடைபெறும்.

நெசவுக் கைத்தொழில் திணைக்களத்தின் ஊழியர் சபை, மாகாண அரசு, கூட்டுறவு, தனியார் பிரிவுகளின் கைத்தறி நெசவுத் தொழில் துறையில் உள்ளடக்கப்படுபவர்களின் வினைத்திறனை மேம்படுத்துதலை நோக்காகக் கொண்டு 2015 கீழ் குறிப்பிடப்படும் வகையில் பயிற்சி நெறி நடாத்தப்பட்டன.



நெசவு பயிற்சி பாடசாலை மாணவர்களின் ஆளுமையினை வளர்க்கும் பயிற்சி



இடை அவகாச நிர்மாணம் பற்றிய பயிற்சி செயற்திட்டம் மாளம்பே (மேல்மாகாண நெசவு போதனாசிரியர்களுக்கு)



பாவுஜாலா வடிவு சம்பந்தமான பயிற்சி செயற்திட்டம் பின்னவளை (சப்ரகமுவ மாகாண நெசவு போதனாசிரியர்களுக்கு)

2015 நடாத்தப்பட்ட பயிற்சிகள் பற்றிய விபரங்கள்

| இல | திகதி | பாடநெறியின் பெயர் | இடம் | நடாத்தப்பட்டதினங்கள் | கலந்துகொண்ட மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| 1 | 2015-01-12/13/14/15/16 | குறுக்கு ஜாலா வடிவு | வெலிமழுவ சபரகமுவ மாகாணம் | 5 | 15 |
| 2 | 2015-02-24/25/26/27 | பள்ளு வடிவு | இப்பாகமுவ வடமேல் மாகாணம் | 4 | 22 |
| 3 | 2015-03-09/10/11/12 | பள்ளு வடிவு | தியகம மேல் மாகாணம் | 4 | 15 |
| 4 | 2015-03-15/19/20 | பெருமதி சேர்க்கப்பட்ட பொருட்கள் | மகர மேல் மாகாணம | 3 | 27 |
| 5 | 2015-05-11/12/13/14 | பள்ளு வடிவு | அகலவததை மேல் மாகாணம | 4 | 21 |
| 6 | 2015-05-19/20/21/22 | தும்பர வடிவு | போயகனே வடமேல் மாகாணம் | 4 | 23 |
| 7 | 2015-05-25/26/27/28 | தும்பர வடிவு | பின்னவல சபரகமுவ மாகாணம் | 4 | 15 |
| 8 | 2014-05-06-07/08/09 | பாடசாலை மாணவர்களின் ஆளுமையினை மேம்படுத்தும் நிகழ்ச்சி | கொட்டல நெசவு பாடசாலை | 3 | 28 |
| 9 | 2015-06-15/16/17 | வர்ண பொருத்தப்பாடு | கட்டுபெத்த மொரட்டுவ | 3 | 26 |
| 10 | 2015-07-08/09/10 | இடை அவகாச நிர்மாணம் | கட்டுபெத்த மொரட்டுவ | 3 | 9 |
| 11 | 2015-07-20/21/22 | லெனோ நெசவு வடிவு | கட்டுபெத்த மொரட்டுவ | 4 | 10 |
| 12 | 2015-07-27/28/29 | இயற்கை வர்ணம் | கட்டுபெத்த மொரட்டுவ | 3 | 27 |
| 13 | 2015-08-10/11/12 | வாப் பிரின்டின் | கட்டுபெத்த மொரட்டுவ | 3 | 21 |
| 14 | 2015-09-07/08/09/10 | பள்ளு வடிவு | கட்டுபெத்த மொரட்டுவ | 4 | 34 |
| 15 | 2015-09-21/22/23 | பெருமதி சேர்க்கப்பட்ட பொருட்கள் | கட்டுபெத்த மொரட்டுவ கட்டுபெத்த மொரட்டுவ | 3 | 11 |
| 16 | 2015-09-28/29/30 ஒக் 01 | தும்பர வடிவு | கட்டுபெத்த மொரட்டுவ | 4 | 12 |
| 17 | 2015-10-05 முதல் 16 வரை | பெதம்பிலி | கட்டுபெத்த மொரட்டுவ | 10 | 16 |
| 18 | 2015-10-28 முதல் 30 வரை | பாவுஜாலா வடிவு | கட்டுபெத்த மொரட்டுவ | 4 | 11 |
| 19 | 2015-11-23 முதல் டிசெ 04 வரை | செயற்பாட்டு பரீட்சை | கட்டுபெத்த மொரட்டுவ | 9 | 3 |
| 20 | | நெசவு போதனாசிரியர் | | | |
| 21 | 2015-11-16 முதல் 19 வரை | பள்ளு வடிவு | பின்னவல சபரகமுவ மாகாணம் | 4 | 30 |
| 22 | 2015-11-23 முதல் 26 வரை | இடை அவகாச நிர்மாணம் | மாலம்பே மேல் மாகாணம் | 3 | 21 |
| 23 | 2015-11-11 முதல் 20 வரை | டொபி வடிவு | கட்டுபெத்த மொரட்டுவ | 10 | 12 |
| 24 | 2015-12-01 முதல் 04 வரை | கெச்கார்ட் | கட்டுபெத்த மொரட்டுவ | 4 | 10 |
| 25 | 2015-12-01 முதல் 04 வரை | பாவுஜாலா வடிவு | பின்னவல சபரகமுவ மாகாணம் | 4 | 27 |
| 26 | 2015-12-05 முதல் 06 வரை | தொழிநுட்பதாரர்களினை ஊக்குவித்தல் | கொட்டல மேல் மாகாணம் | 2 | 35 |
| | | | | | 481 |

## 6 பரீட்சை நடாத்துதல்

### நெசவுத்கைத்தொழில் பயிற்சி பாடநெறி தொடர்பான பரீட்சை நடாத்தப்படல்

- நெசவுக்கைத்தொழில் இறுதிச்சான்றிதழ் பத்திரம் மற்றும் அடிப்படை பயிற்சி பாடநெறிகளிற்குரிய குறித்த பரீட்சை நடவடிக்கைகள் 2015 ஜூலை மாதம் 27 29 ஆம் தினங்களின் நடாத்தப்பட்டது. இதற்காக நெசவுப்பாடசாலை மாணவர்கள் 164 பேர் மற்றும் வெளி விண்ணப்பதாரர்கள் 42 பேரும் பங்குபற்றியதோடு நெசவு பாடசாலை மாணவர்கள் 03 பேரும் வெளிவாரி விண்ணப்பதாரர்கள் 05 பேரும் பரீட்சைக்கு தோற்றவில்லை.

| பரீட்சை நிலையம் | நெசவு பாடசாலை மாணவர்கள் | | வெளிவாரி விண்ணப்பதாரர்கள் | |
|---|---|---|---|---|
| | வந்தவர்கள் | வராதவர்கள் | வந்தவர்கள் | வராதவர்கள் |
| கொட்டல | 10 | - | 01 | - |
| கட்டுபெத்த | 12 | - | 06 | - |
| கட்டம்பே | 15 | - | 01 | 01 |
| கிரம | 09 | 01 | - | - |
| போயகனே | 14 | - | 01 | - |
| மாத்தளை | 13 | - | 06 | - |
| பண்டாரவெலை | 14 | 01 | 07 | 01 |
| மாத்தரை | 14 | - | - | - |
| வட்டபுழுவ | 15 | - | 02 | - |
| பின்னவலை | 11 | - | - | - |
| சம்மாந்துரை | 25 | 01 | 11 | 02 |
| நல்லூர் | 12 | - | 07 | 01 |
| **மொத்தம்** | **164** | **03** | **42** | **05** |

- ஒ

ரு வருட அலங்கார பயிற்சி பாடநெறியினை பயில்வதற்காக 2015 சனவரி மாதம் இணைத்துக்கொள்ளப்பட்ட மாணவர்களிற்கான பாடநெறி இறுதியில் நடாத்தப்படுகின்ற பரீட்சை 2016 சனவரி மாதம 18-20 ஆம் திகதிகளில் நடாத்தப்படுவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டது. ஆதற்காக கடம்பே அலங்கார பயிற்சி பாடசாலையின் 08 மாணவர்களும் கட்டுபெத்த அலங்கார பயிற்சி பாடசாலையில் 06 மாணவர்களும் முகம் கொடுக்கவுள்ளனர்.

### திணைக்கள அதிகாரிகளிற்காக நடாத்தப்படுகின்ற தடைதாண்டல் பரீட்சை

- திணைக்களத்தில் நெசவு போதனாசிரியர்களுக்கான தடைதாண்டல் பரீட்சை 2015.12.30 ஆம் திகதி திணைக்களத்தின் கட்டுபெத்த பிரிவில் நடாத்தப்பட்டது.

07 சிறந்த பலனைப் பெறக்கூடிய வழியொன்றாக கைத்தறி நெசவுத் தொழிலினை கிராம மட்டத்தில் விரிவுபடுத்தும் நோக்கத்துடன் 2014 ஆம் வருடத்தில் வேயன்கொட கொட்டலை கிராமத்தில் ஆரம்பிக்கப்பட்ட கைத்தறி புடவை செயற்திட்ட நிறுவனத்தில் பயனாளிகளினை ஊக்குவிப்பதற்காக 2015.11.06 ஆம் திகதி உற்பத்தியாளர்களுக்கு நூல் வழங்கப்பட்டது.





08 கம்பஹா மாவட்டத்தில் சிறு மற்றும் வீட்டுக் கைத்தொழிலினை முன்னேற்றல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட திவுலப்பிட்டி மரந்தகஹமுல கைத்தறி நெசவு கிராம செயற்திட்டத்தின் பயனாளிகளுக்கு உயர் தரத்திலான புடவை உற்பத்திக்கு தேவையான நுல் வழங்கல் 2015.12.07 ஆம் திகதி நடாத்தப்பட்டது.

09 பரம்பரையாக வருகின்ற கைத்தொழிலினை பாதுகாத்து தேசிய உற்பத்தியினை அதிகரிப்பிற்கு உதவி புறிகின்ற தலகுனே உடுதும்பர பிரதேசத்தில் வசிக்கின்ற தும்பர வடிவு உற்பத்தியில் ஈடுபடுகின்ற 11 பேருக்கு அவர்களினை ஊக்குவிக்கும் வகையில் கைத்தறி பொருட்கள் வழங்கள் 2015-12-29 திகதி நடாத்தப்பட்டது.





10 அரசு முலம் அறநெறி பாடசாலை ஆசிரியர்களுக்கு இலவசமாக வழங்கப்படும் 30000 சாரிகளுக்கு பௌத்த விவகார திணைக்களம் முலம் 2015 ஆம் வருடத்திற்காக வழங்கப்பட்ட கொள்வனவினை புடவை கைத்தொழில் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள உற்பத்தியாளர் முலம் வழங்கப்படும்.

11 புடவை கைத்தொழில் திணைக்களத்தின் கீழ் நடாத்தப்படுகின்ற நெசவுத்தொழில் பயிற்சிப் பாடசாலைகளுக்கும் செயற்திட்டங்களுக்கும் தேவையான நூல் மற்றும் உபகரணங்களையும் பிரதான அலுவலகத்திற்கு தேவையான தளபாடங்கள் விலைக்கு வாங்கப்பட்டது.

12 கட்டிட வேலைகளை முடித்த மட்டக்களப்பு பாலமுனை பிரதேசத்தில் அமைக்கப்பட்ட நெசவு பயிற்சி வரணமிடல் மற்றும் விற்பனை நிலையத்தின்

முகாமைத்துவத்தினை இலங்கை நெசவு மற்றும் ஆடைகள் நிறுவனத்திற்கு வழங்கும் ஒப்பந்தம் 2015.10.28 ஆம் திகதி புடவை கைத்தொழில் திணைக்களத்தில் கையொப்பமிடப்பட்டது.

.



13 நெசவுத் தொழில் பயிற்சி பாடசாலைகளில் நெசவுத்தொழில் பயிற்சி பாடநெறியினைத் தொடர்கின்ற மாணவர்களிற்காக நடாத்தப்படுகின்ற ஆங்கிலப் பயிற்சிப் பாடநெறி 2015 ஆம் ஆண்டிலும் நடைமுறைப்படுத்தப்பட்டது.

14 2015 கைத்தறி நெசவுக்கைத்தொழில் கண்காட்சிக்காக சமுகமளிக்கின்ற திணைக்கள அதிகாரிகளிற்காக சீருடையொன்று தயாரிக்கப்படுத்தப்பட்டது.

15 நெசவுத்தொழில் பயிற்சிப் பாடசாலைகளில் கல்வி கற்கின்ற அனைத்து மாணவர்களுக்கும் 2015 வருடத்திலும் 02 சோடி சீருடை வழங்கப்பட்டது.